களவாடுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற பணியினுடைய மொத்த மதிப்பீடு 20 லட்சம் ரூபாய் செலவாகும் என்பதும் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகள் அமைக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஏப்ரல் 93-லே அந்த வட பர்கூர் போன்ற பகுதிகள், அங்கே அந்தக் காட்டில் 144 தடை உத்தரவு இருக்கின்ற காரணத்தினாலேதான் அந்தப் பகுதியிலே புதிதாகச் சாலைகள் அமைக்கிற சாத்தியக்கூறுகள் இப்பொழுது இல்லை.

முற்பகல் 10.20

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய சிறப்புமிகு தலைவரவர்களே, அந்தப் பகுதியில் இப்பொழுது வீரப்பன் இல்லை. மூடப்பட்ட பகுதியாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அரசுப் பணிகள் அனைத்தையும் முறைப்படியாக அங்கே ஜீவன்தாரா வேலையிலிருந்து அத்தனை வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள்-மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுகின்றபொழுது இது மண் சாலையாகத்தான் போட முடியும் என்று சொன்னார்கள். அந்த சாலையையாவது போட்டுக் கொடுத்து இந்த ஆண்டு-இந்த நடப்பாண்டு, 95-96-லே செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மண் சாலைகள் அங்கே இருக்கின்றன. மலையிலே ஏதாவது அரிப்பு ஏற்பட்டிருந்தாலும்கூட அதைச் சீரமைத்து சிறப்பான முறையிலே மண் சாலைகள் அங்கே அமைத்துத்தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 525, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

525—

மார்த்தாண்டம்-பனச்சமூடு சாலையில் பக்கச்சுவர் கட்டுதல்

***20175–திரு. மா. சுந்தரதாஸ்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தாலுகாவில் மார்த்தாண்டம்-பனச்சமூடு சாலையில் சில இடங்களில் பக்கச்சுவர் கட்டிப் பாதுகாக்க அரசு முன்வருமா?

1995 மே 3]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கண்ட சாலையில் பக்கச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேரளாவின் எல்லையைச் சேர்ந்த சாலை. மிகவும் அதிகமாக மழை உள்ள பகுதி. இந்தச் சாலை ஏறத்தாழ ஸ்டேட் ஹைவேஸ்-இலே பல்வேறு இடங்களிலே பஸ் போக்குவரத்து பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. பக்கச்சுவர் கட்டாமல் இருந்தால் தண்ணீருடைய வேக அளவு அதிகமாக இருந்த காரணத்தினால்தான் அந்த ரோடு த்ரீ இயர்ஸ்-க்குத் தார் போட்டால்கூட நிற்காத நிலை இருக்கிறது. ஆதலால் அந்தப் பக்கச் சுவரைக் கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை ஏறத்தாழ 14.1 கிலோ மீட்டர் இருக்கிறது. இதற்கு ஏறத்தாழ 23 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. பொதுவாக, பக்கச் சுவர் கட்டுகின்றபொழுது ஏற்கனவே சாலைகளைப் போடுவதற்கு நிதி ஆதாரங்களே மிக நெருக்கடியான சூழ்நிலையில் இன்றைக்குப் பணிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறோம். பக்கச் சுவர் கட்டுகின்ற சூழ்நிலை அந்த அளவிற்கு அந்தப் பகுதியிலே அவசியமில்லை என்று நெடுஞ்சாலைத் துறையிலேயிருந்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் அது பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன். எதிர்காலத்திலே இது சம்பந்தமாக நிதியாதாரங்கள் சரியாக வருகின்றபொழுது அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாயிடங்களிலேயும் பக்கச் சுவர் கட்ட வேண்டுமென்ற அவசியமில்லை. ஏதோ குறிப்பிட்ட இடங்களிலேதான் தண்ணீர் அதிகமாக வந்து இணைகின்ற வாய்க்கால் வந்து சாலையிலே சேர்கின்ற இடங்களிலே மாத்திரம்தான் தேவைப்படுகிறது. அந்த இடங்களிலேயாவது குறிப்பிட்ட இடங்களிலேயாவது தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கால்வாய்க் கரைகளில் செல்லுகின்ற சாலைகளிலே தான் இதுபோன்ற தடுப்புச் சுவர்களை நாம் முன்னுரிமை

கொடுத்துக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் வெள்ளக் காலங்களிலே அந்தச் சாலைகள் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்திற்காக, அப்படிப்பட்ட தடுப்புச் சுவர்களைக் கட்டுகின்றபொழுது சாலை பாதிக்கப்படாமல் இருக்கிறது. அவைகளுக்ககுத்தான் முன்னுரிமை கொடுக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலே அதுபோன்ற சூழ்நிலை அங்கே இருந்தால் அரசு அதுபற்றி ஆய்வு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *526*, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

526—

மஞ்சள் ஆறு குறுக்கே பாலம் கட்டுதல்

23942*—திரு. தா. வேடியப்பன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு ஊராட்சி, ராமாபுரம் சாலையில் மஞ்சள் ஆறு குறுக்கே தரைப்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சாலை போளூரிலிருந்து மாம்பட்டு கிராமத்திற்குச் செல்வதற்கு ராமாபுரம் வழியாகச் செல்ல வேளாண்மைத் துறை மக்களெல்லாம் அதிக அளவில் பயன்படுத்தக்கூடிய சாலை. இந்தச் சாலை இரண்டு கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. இதிலே இடைப்பட்ட மஞ்சள் ஆற்றிலே மழைக்காலங்களிலே மாம்பட்டு கிராமத்திலே இருக்கக்கூடிய மக்களெல்லாம் அந்த வழியாகத்தான் சவத்தை எடுத்து வர வேண்டிய